...istered as a Newspaper in Ceylon விலை சதம் 10 ★★

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (10 2 66) இதழ் 2

விசுவாவசு தை 28 ஷவ்வால் பிறை 18 வியாழக்கிழமை

## 20-ம் நூற்றாண்டு அறியாத மாது!

போர்ட்டோ அலிகிரி (பிரேஸில்), பெப். 9 வெளி உலகமே என்ன வென்று தெரியாது 79 வருடங்களாகச் சதா பிரார்த்தனையில் மூழ்கி இருந்த ஒரு கன்னியாஸ்திரி நேற்று இங்குள்ள கன்னியாஸ்திரி மடம் ஒன்றில் காலமானார்.

திரேஸா என்ற இந்த மாது, தமது 12-வது வயதில் 1887-ம் ஆண்டில் கார்மெல் கன்னியாஸ்திரிகள் மடத்தில் அனுமதிக்கப்பட்டார். தமது 91-வது வயதில் இவர் நேற்று காலமானர்.

இவர் தமது பிரார்த்தனை மண்டபத்தை விட்டு இதுவரை வெளியே செல்லவில்லை. 79 வருடங்களாக மத வழிபாட்டில் மூழ்கிக் கிடந்தார். வெளி உலகமே இவருக்கு என்னவென்று தெரிந்திருக்காதாம்!

# மந்திரி சுகததாசாவை கொல்ல சதிமுயற்சி

## பொலிசார் முறியடித்தனர்; மூவர் கைதுசெய்யப்பட்டனர்

கொழும்பு, புதன்

**தேசியமய மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவை கொல்லுவதற்கு செய்யப்பட்ட சதி திட்டத்தை இரகசியப் பொலிசாரும் பொரளைப் பொலிசாரும் கண்டு பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.**

கொழும்பிலுள்ள வனாத்த முல்லை என்ற இடத்தில் பதுங்கியிருந்த பொலிஸ் கோஷ்டி ஒன்று கைவெடி குண்டுகளுடன் வந்து கொண்டிருந்த வாடகைக் கார் ஒன்றைத் தடுத்து நிறுத்திக் கைப்பற்றினர். குண்டுகளும் காரும் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளன.

இத்திட்டத்துடன் சம்பந்தப் பட்டவர்களென்று கூறப்படும் மூவரை பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களில் ஒருவர் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரென்றும் திரு. சுகததாசாவை அரசியல் ரீதியில் எதிர்த்து வந்தவர் என்றும் கூறப்படுகிறது. மேற்கொண்டும் அனேகர் கைது செய்யப்படவிருப்பதாக பொலிஸ் வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

மார்க்ஸீய கட்சிகளுடன் ஒரு சமயத்தில் நெருங்கிய தொடர்பு கொண்ட ஒருவரிடத்திலிருந்தும், மற்றும் சிலரிடமிருந்தும், திரு சுகததாசாவினுடைய மெய்க் காப்பாளரிடமிருந்தும் கிடைத்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு தான் பொலிசார் சதி திட்டத்தை முறியடித்தனர்.

சுகததாஸ விளையாட்டரங்கிலோ அன்றேல் பாராளுமன்றத்திலிருந்து வீடு திரும்பும் வழியிலோ 'சரிப்படுத்தி' விடுவதென்று திட்டமிருந்ததாம். இந்த திட்டத்தின்படி துறைமுக கார்ப்பரேஷன் தலைவர் திரு. அபயகுணசேகராவையும் முடித்துக் கட்டிவிடுவதென திட்டமிருந்ததாம்.

(6-ம் பக்கம் பார்க்க)

சபாநாயகர்மீது

## எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை தோற்றது

கொழும்பு, புதன்

**சபாநாயகர் மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று இன்று பார்லிமெண்டில் தோல்வியடைந்தது எதிர்கட்சித் தலைவர் ஸ்ரீமா, பீலிக்ஸ் கலுகல்லை, ஆர். ஜி சேனநாயக்கா, வில்லியம் டி சில்வா ஆகிய எவரும் விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளவில்லை.**

தலைமைப்பீடத்தின் மதிப்பையும் அதனிடத்தே இருக்கவேண்டிய பாரபட்சமற்ற உயர் மரபுகளையும் பேணுவதற்கு தாம் தகுதியற்றவரென்பதை சபாநாயகர் நிரூபித்து விட்டாரெனக்கூறும் எதிர்க்கட்சியினருடைய பிரேரணை இன்று 32 வாக்குகளைப் பெற்று சபையில் தோல்வியடைந்தது.

பிரேரணையை எதிர்த்து 89 பேர் வாக்களித்தனர். மேற்படி பிரேரணையின்மீது காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை விவாதம் நடைபெற்றது.

விவாதத்தைசமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் என். எம். பெரேரா ஆரம்பித்து வைத்தார். அவரைத் தொடர்ந்து யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி ஜி, பொன்னம்பலம் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் பேசினர்.

அவரைத் தொடர்ந்து கொழும்பு மத்திய அங்கத்தவர் திரு. ஆர். ஆர். பிரேமதாசாவும், பீட்டர் கெனமனும் பேசினர்கள். பிரேரணையை கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்த ஜனவரி 11-ந் திகதி இருந்த சூடான நிலைமைக்குப்

(6-ம் பக்கம் பார்க்க)

## திருமண வைபவத்தில் பிரதமர் டட்லி

### சுகவீனமுற்றிருந்த பின் முதல் கலந்துகொண்ட நிகழ்ச்சி

கொழும்பு, புதன்

சென்ற சில தினங்களாக உடல்நலங் குன்றியிருந்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சுதந்திர தினக் கொண்டாட்டம் உட்பட தாம் கலந்து கொள்ள விருந்த பல பொது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்திருந்தார்.

சுகவீனத்தின்பின் இன்று கொழும்பில் நடைபெற்ற பிரபல திருமண வைபவமொன்றில் கலந்துகொண்ட பிரதமர், திருமண நிகழ்ச்சிகளை சுமார் இரண்டு மணி நேரமாகக் கவனித்துக் கொண்டிருந்ததுடன், தம்பதிகளைப் பல கோணங்களில் தாமே புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

முன்னாள் ஊர்காவற்றுறைப்பிரதிநிதி திரு. ஏ. எல். தம்பிஐயாவின் புதல்வி சுபோதினி தம்பிஐயாவுக்கும் பிரபல வழக்கறிஞர் திரு. ஸி. தியாகலிங்கம் கியூ ஸியின் புதல்வன் செல்வன் நிர்மலிங்கத்திற்கும் இன்றுநடைபெற்ற திருமண வைபவத்திலேயே பிரதமர் கலந்து கொண்டார்.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் முன்னாள் வவனியா எம். பி.யும் மணமகனின் பெரியதந்தையுமான திரு. ஸி சுந்தரலிங்கத்துக்கும் மத்தியில் அமர்ந்திருந்த பிரதமர், திரு. தியாகலிங்கத்துடனும் அங்கு சமுகமளித்திருந்த மற்றும் பல பிரமுகர்களுடனும் அடிக்கடி உற்சாகமாகப் பேசிக் கொண்டுமிருந்தார்.

அச்சிடும் தாள்கள் முதலியன, அப்பியாசப் புஸ்தகங்கள், மலிபன் விஸ்கோத்துகள், தங்காலு தேயிலை, மற்றும் ஏக விநியோகப் பொருட்கள் எமது மொத்த விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,

(வரையறுக்கப்பட்டது.)

மொத்த விற்பனை நிலையம்,

287, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

1594

## அரிசியில் ரூ. 15 லட்சம் சேமிக்கத் திட்டம்

### பர்மிய அதிபரிடம் பிரதமர் கேட்பார்

கொழும்பு, வியாழன்

பர்மாவிடமிருந்து அரிசி வாங்குவதில் இவ்வருடம் பதினைந்து லட்சம் ரூபாய் மிச்சப்படுத்துவதற்கு பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா நம்பிக்கை கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. இன்று இலங்கைச்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்யும் பர்மிய அதிபர் ஜெனரல் நீவினுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் பிரதமர் பர்மாவிடமிருந்து வாங்கும் அரிசியின் விலையைக் குறைப்பது பற்றி கேட்பாரெனத் தெரிகிறது விலை குறைப்பு பற்றி இப்பொழுதே ராஜீய ரீதியில் பர்மாவுக்கும் இலங்கைக்குமிடையில் பேச்சு நடைபெற்று வருகிறது.

#### இரத்மலானையில்

இன்று வியாழக்கிழமை இலங்கைக்கு விஜயஞ் செய்யும்பர்மிய புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நீவினுக்குச் சிறப்பான வரவேற்பளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஜெனரல் நீவினையும் அவரது கோஷ்டியினரையும் ஏற்றிக்கொண்டு வரும் விசேஷ விமானம், இன்று பகல் 12-30 மணிக்கு இரத்மலானை விமான நிலையம் வந்தடையும்.

விசேஷ விமானம் இரத்மலானை வந்தடைந்ததும், விமானநிலையத்தில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லி[illegible] டட்லி சேனநாயக்க உட்பட பல முக்கிய பிரமுகர்களும் பர்மா அரசாங்கத் தலைவரை எதிர்கொண்டு வரவேற்பர். இதன்பின்னர் நீவின் இராணி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

#### 22 பேர் வருகிறார்கள்

பர்மா புரட்சிச் சபையின் தலைவரும் மந்திரிகள் சபையின் தலைவருமான ஜெனரல் நீவின். தனது பாரியாருடனும் இரண்டு மந்திரிகளுடனும் ரங்கூன்நகர மேயருடனும் மற்றும் உயர்தர அரசாங்க அதிகாரிகளுடனும் இங்கு வந்து சேருகின்றார். இவரது கோஷ்டியில் இருபத்திரண்டு பேர் உள்ளனர்.

#### வியட்னும் இடம்பெறும்

ஜெனரல் நீவின் இலங்கையில் தங்கியிருக்கும்பொழுது பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் சர்வதேச பிரச்னைகள் குறித்தும் இரு நாடுகளின் உறவு நிலைகள் பற்றியும் பேச்சுக்கள் நடத்துவார்.

சர்வதேச பிரச்னைகளின் போது வியட்னும் நெருக்கடியும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் இலங்கையைவிட்டுப் புறப்படுமுன்னர் இலங்கைப் பிரதமருக்கும் ஜெனரல் நீவினுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உங்கள் கைகள் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தாலும் உங்கள் நாக்கு இறைவனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அப்படிச் செய்தால் உங்கள் வாழ்வும் சமூகவாழ்வும் இறை அருளால் சுபிட்சமாக வளர்ந்தோங்கும். — சுவாமிராமதாஸ்

ஈழநாடு

EEDA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELANADU Jaffna. Phone: 5??

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 28ம் உ (10-2-66)

# கால் நடைச் செல்வங்கள்

கிராமப் பகுதிகளில் கால்நடைத் திருட்டு அதிகரித்து வருவதைப்பற்றியும் இவற்றைத் தடுக்க நடவடிக்கைஎடுக்கவேண்டிய அவசியம்பற்றியும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கத்தவர்கள்பலர் வற்புறுத்திக் கூறினர். கால்நடைத் திருட்டுக்களைத் தடுக்கவும் அவைகளைப் பாதுகாக்கவும் விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்ப்போம்.

ஒரு நாட்டின் செல்வச் செழிப்புக்கு அந்நாட்டின் கால்நடைகளும் முக்கிய காரணம். நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு இன்று 'டிராக்டர்' போன்ற இயந்திர சாதனங்கள் இருப்பதுவும் அவை செலவை மிச்சப்படுத்துவதும் உண்மையாக இருக்கலாம். என்றாலும் நிலத்துக்குத்தேவையான உரத்தை சாணமாக கால்நடைகள் கொடுப்பது போல் டிராக்டர்கள் கொடுக்கமாட்டா; அதேபோல் தாய்ப்பால் போன்று குழந்தைகளுக்கு போஷாக்கு நிறைந்த பசும்பாலை டிராக்டர்கள் கொடுக்கவும் முடியாது. எனவே கால்நடைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியம்.

இறைச்சிக்குத் தட்டுப்பாடு இருப்பதால்தான் கால்நடைத் திருட்டு அதிகரித்துள்ளதாகவும் இறைச்சித் தட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்றும் யோசனைகூறப்படுகிறது. இறைச்சித் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக நாட்டிலுள்ள கால்நடைகள் அனைத்தையும் அடித்துச் சாப்பிட்டுவிட்டு, குழந்தைகளின் பாலுணவுக்காக ஆஸ்திரேலியாவையும் கனடாவையும் நம்பி கப்பல் எப்போது பால் கொண்டு வருமென எதிர்பார்த்திருப்பதா? இறைச்சித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன் இங்குள்ள கால்நடைச் செல்வங்கள் அழிந்து போகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடைகளுக்குப் போதிய புல்தரைகளை ஒதுக்கவும், அவைகளைப் பராமரிக்கவும் அரசாங்கம் மட்டுமல்ல ஸ்தலஸ்தாபன சபைகளும் இதர ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும். கால்நடைச் செல்வங்களைப் பாதுகாப்பதற்காக இறைச்சி உணவுக்குப் பதிலாக வேறு உணவு உண்பதற்கான முறைகளைக்கூட உருவாக்குவது நல்லது.

கால்நடைகளைப் பாதுகாக்கவும், இறைச்சித் தட்டுப்பாட்டை நீக்கவும் ஒரு சபையை உடனடியாக நியமித்து அதனிடம் இப்பொறுப்பை ஒப்படைப்பது நல்லது.

# பர்மிய அதிபரின் விஜயம்

பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின் இன்று இலங்கைக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்கிறார். ஆசியநாடு ஒன்றின் தலைவரென்ற முறையில் மட்டுமல்லாது. இலங்கையின் நண்பரென்ற முறையிலும் அவரை, இலங்கை மக்கள் நல்வரவுகூறி வரவேற்கின்றனர்.

ஜெனரல் நீவின் இதற்கு முன்பும் இங்கு விஜயம் செய்திருந்தபோதிலும்கூட. இதற்கு முன் வந்தபொழுது இலங்கையிலிருந்த அரசியல் நிலைக்கும் இப்பொழுதுள்ள நிலைக்கும் அதிக வித்தியாசம் உண்டு இன்று இலங்கையில் தேசிய ஒற்றுமை மீண்டும் உருவாகி ஸ்திரமான அரசாங்கம் ஆட்சியிலிருக்கக் கூடியவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இச்சமயத்தில் ஜெனரல் நீவின் இங்கு விஜயம் செய்வது இரு நாடுகளுக்கிடையிலுமிருந்துவரும் நல்லுறவும், நட்புறவும் வலுப்பெறவும் வர்த்தக கலாசார, தொடர்புகள் மேலும் விருத்தியடையவும் வழி வகுக்குமென எதிர்பார்க்கலாம். பர்மாவிடமிருந்து இலங்கை பலகாலமாக அரிசி வாங்கி வருகிறது. உலக மார்க்கட்டில் அரிசியின் விலை குறைந்தபோதும்கூட இலங்கை செய்துகொண்ட ஒப்பந்தப்படி அதே விலையையே கொடுத்து வந்துள்ளது. இன்று இலங்கையின் பொருளாதாரம் கஷ்டநிலையிலிருக்கிறது: இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மைக்கான முறையில் வர்த்தக ஒழுங்குகளைச் செய்து கொள்ள எவ்வளவோ இடமுண்டு.

ஆசியாவில் அமைதியும் சமாதானமும் நிலவவும், உலக சமாதானத்தை நிலைநாட்டவும் ஆசிய நாடுகளுக்கிடையில் நட்புறவும் நல்லெண்ணமும் நிலவவேண்டியது அவசியம். ஆசிய நாடுகள் பரஸ்பரம் தமக்குள் உதவி செய்து கொண்டால்தான் அந்நியரின் தலையீடு ஏற்படாமல் தவிர்க்க முடியும். இந்த வகையில் ஜெனரல் நீவினும் நமது பிரதமரும் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகள் நல்ல முடிவைக் கொண்டுவருமென நம்புவோம்.

## நோயாளர் கஷ்டம்

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றுக்குறையினால் நோயாளர்கள் மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. முன்பு இருந்த அப்போதிக்கரிமார்கள், டாக்டர்கள் சிலர் மாற்றலாகிச் சென்றமையால் அந்த இடங்களுக்கு வேறு டாக்டர்கள் அப்போதிக்கரிமார்கள் இதுவரை நியமிக்கப்படாததாலேயே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

சுவிட்சர்லாந்தின் அரசியல் அமைப்பு

# 22 மண்டலங்களை யுடைய சமஷ்டி அரசியல்

(நேற்றைய தொடர்ச்சி)

1874-ம் ஆண்டில் சமஷ்டி அரசியல் அமைத்து, அதில் 22 'கான்டன்' என்ற மண்டலங்களையும் இணைத்தனர். இதில் மூன்று கான்டன்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கான்டனுக்கும் நிர்வாக சுயாட்சி அதிகாரம் அதிகமாக உள்ளதென்பதைப் பார்த்தோம். தேய ஆதிபத்திய அதிகாரம் இரு சபைகள்உள்ள பார்லிமெண்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது 'ஸ்டான்டிராட்' என்ற அரசாங்க சபைக்கு ஒவ்வொரு கான்டனும் இருபிரதிநிதிகளை அனுப்புகின்றது. அரை கான்டன் ஒருபிரதிநிதியை அனுப்பும்.

'நாஷனல்ராட்' என்றதேசிய சபையில் மொத்தம் 196 பிரதிநிதிகள் உளர். ஜனத்தொகையில் 22 ஆயிரம் பேருக்கு ஒருபிரதிநிதிவீதம் தெரிவு செய்கிறார்கள்.

'டண்டஸ் ராட்' என்ற சமஷ்டிச் சபையில் 7 பிரதிநிதிகள் உளர். அச்சபையிடமே நிர்வாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சமஷ்டி சபையிலுள்ள எழுவரில் ஒருவரே தலைவராகத்தெரிவு செய்யப்படுகிறார். தலைவரின் பதவிகாலம் ஒரு வருஷந்தான். இவ்வருஷ உப தலைவராக இருப்பவர் அடுத்தஆண்டில் தலைவராகத் தெரிவு செய்யப்படுவது வழக்கம்.

## சர்வஜன வாக்கெடுப்பு

சுவிட்ஸர்லாந்து அரசியலின் விசேஷ அம்சம் சர்வஜன வாக்கெடுப்புத்தான். அதற்கு ''ரெபரண்டம்'' என்பர். பொதுமக்களின்கருத்தை அறியும் முறையே இதுவாகும். இதில் இரண்டு விதம்: ஒன்று கட்டாய வாக்கெடுப்பு. மற்றொன்று இஷ்டத்தைப் பொறுத்தது. பார்லிமெண்டில் நிறைவேறும் சட்டம் செல்லுபடியாகவேண்டுமென்றால், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் வாக்காளரின் ஆதரவை அது பெறவேண்டும். இது கட்டாய வாக்கெடுப்பு. சமஷ்டி அரசியலில் செய்யும் திருத்தங்கள் இவ்விதம் மக்களின் அங்கீகாரம் பெறவேண்டும், பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றால் மட்டும் போதாது. பெரும்பான்மை கான்டன்களின் ஆதரவையும் பெற்றதாக இருக்கவேண்டும். ஒரு கான்டனில் பெரும்பான்மை வாக்காளரின் ஆதரவைப் பெற்றாலே அது அக்கான்டனின் ஆதரவைப் பெற்றதாகும்.

கான்டனைப்பற்றிய சாதாரண சட்டதிட்டங்களுக்குங்கூடப் பல இடங்களில் இவ்வித கட்டாய வாக்கெடுப்பு நடக்கின்றது. பணச்செலவு சம்பந்தமாகவும் மக்களின் அங்கீகாரத்தைப்பெற, கட்டாய வாக்கெடுப்பு நடப்பதுண்டு. ஆகவே ஒவ்வொரு கன்டன் நிர்வாகத்திலும் மக்களே முடிவான தீர்மானம் செய்பவர்கள். சோலூர் என்ற கான்டனில் ஒருலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட செலவினம் எதுவும் மக்களின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

இஷ்ட வாக்கெடுப்பு என்பது 30 ஆயிரம்பேர் கையொப்பமிட்டுக் கேட்டுக்கொண்டால் சமஷ்டி அரசாங்கம் செய்யும் எவ்வித ஒப்பந்தம் அல்லது சட்டத்தையும்பற்றி சர்வஜன வாக்கெடுப்பு எடுக்கவேண்டும், இது 1874-ம் வருஷம் செய்த ஏற்பாடு. இப்போது ஜனத்தொகை பெருகி விட்டதால் இந்த எண்ணிக்கை [illegible] சட்டங்கள் செலவினங்கள் இவ்விஷயமாகவும் இஷ்ட வாக்கெடுப்பு எடுக்க இடமுண்டு. முடிவாகப் பொது மக்கள் கையில் 'வீற்றோ' அதிகாரம் அளிப்பதாக இது உள்ளது. இவ்வித ஏற்பாடு சுவிட்ஸர்லந்து, இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குத்தான் . ஏற்றதேயன்றி, பெரியநாடுகளுக்கு அனுபவசாத்தியமற்றதாகும். ஒரு கட்சியோ அல்லது பார்லிமெண்டோ நிரந்தரமான ஆதிக்கம் செலுத்தமுடியாதபடி சுவிட்ஸலாந்தில் இவ்வித சர்வஜன வாக்கெடுப்பு முறை தடுப்பதாகவுள்ளது. மன்னருக்குப் பதில் மக்கள் விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். இதிற் சில குறைபாடுகள் இல்லாமலில்லை. என்றாலும் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக நடக்காமல் இந்த முறை அவர்களைக் கட்டுப்படுத்தி நிதானமாகக் காரியங்கள் செய்ய உதவுகின்றது.

## நேர்முக வாக்கெடுப்பு

ஐந்து மண்டலம் அல்லது கான்டன்களில் 'லோண்டஸ் ஜிமின்டன்' என்ற நேர்முக ஜனநாயக வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. இதன்படி ஒவ்வொரு வருஷமும் வசந்த காலத்தில் ஒரு ஞாயிறன்று வாக்குரிமை பெற்ற எல்லா ஆண்களும் ஓர் இடத்திற்கூடித் தங்கள் தங்கள் கவர்னர்களைத் தெரிவுசெய்வதுடன், தங்களுக்கான சட்ட திட்டங்களைச் செய்கின்றார்கள். இம்முறை சிறிய கான்டன்களுக்குத்தான் உகந்தது.

பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து அதன்படி நடந்துகொள்வதே உண்மையான ஜனநாயகம். சென்ற இரண்டாவது யுத்த காலத்தில் நாஜிகளின் கொடுமை தாங்காமல் ஏராளமானவர்கள் சுவிட்ஸர்லாந்தில் தஞ்சும்முக வந்தனர். முதலில் அரசாங்கம் உணவுக்கஷ்டம் முதலிய காரணங்களால் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் பொதுஜனங்கள் எல்லாருக்கும் தாராளமாகத் தஞ்சம் அளிக்கவேண்டுமென்பதை ஆதரிக்கவே அரசாங்கமும் அதற்கிணையத் தன் கொள்கையை மாற்றிக்கொண்டது.

சுவிட்ஸர்லாந்தில் பல அரசியல் கட்சிகள் இருப்பினும் கூட்டரசாங்க முறையே நடைமுறையில் உள்ளது. தீவிர ஜனநாயகக்கட்சி. 3 பிரதிநிதிகளை 7 பேரடங்கிய சமஷ்டிச் சபைக்கு அனுப்பியுள்ளது சொத்துரிமை உள்ளவர்களின் கட்சியாக இது மதிக்கப்படுகிறது. கத்தோலிக்க கன்சர்வேட்டிவ் கட்சிக்குப் பெடரல் கவுன்ஸிலில் இரு ஸ்தானங்களுள்ளன. சமதர்ம ஜனநாயகக் கட்சி மார்க்ஸியக் கொள்கையை முதலில் பின்பற்றியதெனினும் இப்போது தொழிலாளர் யூனியன் தான் ஆதரவுபெற்ற ஜனநாயக முறையையே பின்பற்றுகின்றது. இக்கட்சிக்குப் பெடரல் சபையில் ஒரு ஸ்தானமுள்ளது. மற்றோர் ஸ்தானத்தை விவசாயிகள் கட்சி பெற்றுள்ளது. கம்யூனிஸ்டுகள் தங்களை தொழில் கட்சியென்று அழைத்துக் கொள்கின்றனர். இதைத் தவிர வேறு சில்லறைக் கட்சிகளும் இயங்குகின்றன. கம்யூனிஸ்ட்கட்சிக்கு யுத்தத்திற்குப் பின் ஆதரவு அதிகரித்திருக்கின்றது. பலவித தொழில், பொருளாதார ஸ்தாபனங்களும் கட்டுப்பாடாக இருப்பதால் அரசியல் கட்சிகளுக்கு அதிக செல்வாக்கு இல்லை. தனிப்பட்டவர்களும் புதிய

(5ம் பக்கம் பார்க்க)

## ஜயசரன் எழுதுவது

கலைஞர்களுக்கு மேலை நாடுகளில் எவ்வளவு ஆதரவும் மதிப்பும் அளிக்கிறார்கள் தெரியுமா? அமெரிக்காவைச்சேர்ந்த இந்தியானா சர்வகலாசாலை வாத்தியக் கோஷ்டியினரை யாழ்ப்பாண திறந்தவெளி அரங்கில் பார்த்தேன். கேட்டேன். அந்த இளம் கலைஞர்கள் கண்ணியமாக ஒரேமாதிரி உடைதரித்து, விதவிதமான வாத்தியங்களுடனே மேடையில் அளித்த காட்சி என் மனதைப் பெரிதும் கவர்ந்தது.

அமெரிக்காவின் கலாதூதர்கள்போல் அவர்கள் விளங்கியதுடன் நமது கலைகளைப்பற்றியும் கலைஞர்களைக்குறித்தும் தெரிந்து கொள்ள மிக ஆவல் காட்டினர். நமது மிருதங்க வித்வான் ராமநாதன் ஓர் ஆவர்த்தனம் வாசிக்க, அக்கோஷ்டியைச் சேர்ந்த தாள வாத்தியக்காரரும், தமது ''தபளா தரங்''கிலே வாசித்துத் தன் திறமையைக்காட்டி பலத்த கரகோஷம் பெற்றார். கிழக்கும் மேற்கும் கலைஞர்கள் மூலம் ஒன்று சேர்ந்தது, மகிழ்ச்சியளிக்கும் ஓர் அபூர்வக் காட்சி.

வித்வான் ராமநாதனை, அக்கோஷ்டித் தலைவர் பாராட்டி, அவருக்கு மாலையிட்டு மரியாதை செய்தார். ''திறமையான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியாரின் பாடல்தான் எனக்கு நினைப்பு வந்தது. கலைஞர்களுக்குத்தானே தெரியும் கலைஞரின் அருமை!

நமது சங்கீத வித்வான்களில் சிலராவது வெளிநாடுகளுக்குச் சென்று தங்களது திறமைகளைக்காட்டி, கலைத்தூதர்களாக விளங்கும் நாள் எந்நாளோ!

ஃ ஃ ஃ

அந்தக் கோஷ்டியினரின் சங்கீதம் எனக்குப் புரியவில்லை. ஏதோ அபஸ்வரம் போல் இருந்தது. என்றாலும் ஒவ்வொருபாட்டும் முடிந்ததும் எல்லாருடனும்சேர்ந்து கைதட்டினேன். அவ்வளவு சிரமப்பட்டு பயின்று, தூரத்திலிருந்து நம்மை மகிழ்விக்க வந்திருப்பவர்களுக்கு நாம் அதுகூடச் செய்யவேண்டாமா?

இப்பாட்டுகளுக்கு சாகித்யம் ஏதாவது உண்டா என்று கேட்டேன். பக்கத்திலிருந்த அன்பர் அப்படி எதுவுமில்லை என்றும் எல்லாம் இசை ஜாலம்தான் என்றார். அவர்களுக்கு அடுத்தபடியாக வேம்படிக் கல்லூரி மாணவிகளின் வாத்தியக் கோஷ்டியின் இன்னிசைக் கச்சேரி. செவிகளுக்கும், கண்ணுக்கும் எவ்வளவு இன்பமாக இருந்தது! சுதந்திரவிழாவிலே 'மைக்' வேலை செய்யாததால், இக்கோஷ்டியின் சங்கீதம் எடுபடவில்லை. அதற்கு ஈடுசெய்து அன்று நல்ல பெயர் எடுத்துவிட்டனர் அக்கல்லூரிக்கோஷ்டியினர். இந்தச் சங்கிதங்களை அமெரிக்க கலைமாணவர்கள் மிகக் கூர்ந்து கவனித்து பலத்த கரகோஷம் செய்து பாரட்டினர். திரு குமாரசாமியின் மாணவிகள் அளித்த அழகான பரதநாட்டியத்தையும், வந்த கலைஞர்கள் பெரிதும் ரஸித்துப் போற்றினர்.

ஃ ஃ ஃ

அன்று, முதலில் மின் விளக்குகள் சுமார் அரை மணி நேரம் வேலை செய்யவில்லை. இதற்கு தமது முனிஸிபல் சபை பொறுப்பல்லவென்றும், சுன்னாகம் மின்நிலையம் தான் காரண

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடவியட்னாம் குண்டுவீச்சை அதிகரிக்குமாறு தென்வியட்னாம் கோரிக்கை

## 'அவசியமானால் ஹைபோங்மீது குண்டுவீசுக'-- தென் வியட்னாம் தலைவர்கள்

### ஹொனலுலு மகாநாட்டில் கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது

ஹொனலுலு, பெப். 9

வியட்னாம் நெருக்கடி குறித்து அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸனுக்கும் தென் வியட்னாம் தலைவர்களுக்குமிடையே ஹாவாய் தலைநகர் ஹொனலுலுவில் நடைபெற்ற மகாநாடு நேற்று முடிவடைந்தது. ஹொனலுலு பிரகடனமொன்றை வெளியிட்டதன் பின்னர் அதிபர் ஜோன்ஸனும் தென் வியட்னாம் தலைவர்களும் இங்கிருந்து தாயகம் புறப்பட்டுள்ளனர்.

அதிபர் ஜோன்ஸனுக்கும் தென் வியட்னாம் தலைவர்களுக்குமிடையே கைச்சாத்தான கூட்டுப் பிரகடனத்தில்; வியட்னாம் சமாதானத்துக்கான அமெரிக்காவின் தீவிர முயற்சி, ஹானோயின் போர் வெறி, சமாதானத்தில் ஹானோய் நாட்டமில்லாதது பற்றிக் குறிப்பிட்டுள்ளது. வடக்குவியட்னாமில் விமானக்குண்டு வீச்சுக்களைத் தீவிரப்படுத்துமாறு தென்வியட்னாம் தலைவர்கள் வற்புறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஹொனலுலுவில் நடைபெற்ற 'இருதரப்பு மகாநாட்டில்' வியட்னாம் நிலைமை குறித்து விளக்கமாக ஆலோசிக்கப்பட்டதென்றும் ஆனாலும் புதிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்ட அமெரிக்கா முழு முயற்சிகள் எடுத்தபோதிலும்வடக்கு வியட்னாமுக்கு இதில் சிறிதளவும் நாட்டமில்லை என்று இந்தப் பேச்சுக்களின் போது கூறப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

#### வியட்காங்கியருக்கு கதவடைப்பு

வியட்னாம் சம்பந்தமான ஒரு மகாநாடு கூட்டப்படும் பட்சத்தில் அதில் வியட்காங்கியருக்கு இடமளிக்கக் கூடாதென்றும் தாங்கள் கலந்துகொள்ளும் பேச்சுக்களில் வியட்காங்கியரை அனுமதிக்கக்கூடாதென்றும் தென்வியட்னாம் தலைவர்கள் மீண்டும் தெளிவுபடக்கூறியுள்ளனர்.

#### குண்டுவீச்சுக்கு முழு ஆதரவு

வடக்கு வியட்னாமில் விமானக் குண்டுவீச்சுக்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டபொழுது இதற்கு தென் வியட்னாம் முழு ஆதரவு அளித்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

வடக்கு வியட்னாமிலுள்ள பல நிலையங்கள் மீதும் விமானக்குண்டு வீச்சுக்களை நடத்த வேண்டுமென்றும் அவசியமேற்படின் ஹைபொங்க துறைமுக நகரத்தின்மீதும் குண்டுவீசவேண்டுமென்றும் தென்வியட்னாம் தலைவர்கள் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### லாஸ்ஏஞ்ஜல்ஸில் சந்திப்பு

ஹொனலுலுவிலிருந்து புறப்பட்ட அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் இன்று பகல் லாஸ்ஏஞ்ஜல்ஸில்அமெரிக்க உப ஜனாதிபதி ஹம்ப்ரியைச் சந்தித்து சில மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார். ஹொனலுலுவிலிருந்து திரும்பிய தென்வியட்னாம் தலைவரும், பிரதமரும் உப ஜனாதிபதி ஹம்ப்ரியுடன் இன்று பேச்சுக்கள் நடத்தினார்கள்.

### ஹம்ப்ரியின் ஆசிய விஜயம்

இதற்கிடையில் அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஹியுபேர்ட் ஹம்ப்ரி இன்று தென்வியட்னாம் தலைவர்களுடன் சைகோன் செல்லவிருக்கின்றார். ஹொனலுலு மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளுக்கமையவும் அதிபர் ஜோன்ஸனின் புதிய நடவடிக்கையின் பலனாகவும் திரு. ஹம்ப்ரி ஆறு ஆசிய நாடுகளின் தலைநகரங்களுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். இந்நாடுகளின் பெயர் விபரங்கள் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

### "இராணுவ வெற்றிக்கு இடமில்லை"

பிரிட்டிஷ் காமன்ஸ்சபையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் நேற்றுப பேசுகையில் வியட்னாமில் இராணுவவெற்றிக்கு இடமில்லையென்று கூறினார்.

வியட்னாம் நெருக்கடியை அரசியல் தீர்வொன்றின் மூலமேகுறைக்கமுடியுமென்றும் இதற்கு சர்வதேச சமாதான மகாநாடு மிகுந்த பயனளிக்குமென்றும் திரு. வில்ஸன் மேலும் கூறினார்.

#### "குண்டுவீச்சை நிறுத்துக"

ஐக்கிய அரபுக் குடியரசும், ஹங்கேரியும் நேற்று அமெரிக்காவுக்கு மீண்டும் சமாதானக் கோரிக்கைகளை விடுத்துள்ளன. வடக்கு வியட்னாமில் விமானங்களின் குண்டுவீச்சை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும் குண்டு வீச்சுக்கள் வியட்னாம் நெருக்கடிக்குப் பரிகாரமாக அமையாதென்றும் இந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

#### கனடா ஆலோசனை

வியட்னாம் நெருக்கடி குறித்து கனடா இந்தியாவுடன் தொடர்புகொண்டிருக்கிறதென்றும் இருநாடுகளும் இ பற்றி ஆலோசனை நடத்திவருகின்றன என்றும் செய்திகள் கூறுகின்றன.

# இந்திய விமானம் விழுந்துநொறுங்கியது?

ஸ்ரீநகர், பெப். 9

ஸ்ரீநகரிலிருந்து ஜம்முவுக்குச் சென்று காணமற்போன இந்திய ஏர் லைன்ஸ் விமானம் விழுந்து நொறுங்கியிருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தில் 37 பேர் இருந்தனர். விமானம் விபத்துக்குள்ளானதால் அதில் பிரயாணம் செய்தவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனக்கூறப்படுகிறது. இருந்தபோதிலும் தேடுதல் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

வானிலை மோசமான காரணத்தால் தேடுதல் வேலைகளில் தடைஏற்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டது.

# இந்திய-பாக். பிராந்தியம் மீது விமானச் சேவை ஆரம்பம்

கராச்சி. பெப். 9

இந்தியா, பாகிஸ்தான் மீதான விமான சேவைகள் நாளை முதல் மீண்டும் ஆரம்பமாகவிருக்கின்றன. மேற்குப் பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்கான பாகிஸ்தான் விமானச் சேவைகள் இந்தியப் பிராந்தியத்தின்மீது நடைபெற இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதே மாதிரி, இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வானப் பிராந்தியத்தின்மீது பறந்து செல்ல பாகிஸ்தான் அரசாங்கம் அனுமதித்துள்ளது.

டாக்காவுக்கும் கராச்சிக்குமிடையேயும், கராச்சிக்கும் லாகூருக்குமிடையேயும் பாகிஸ்தான் விமானங்கள் நாளொன்றுக்கு பன்னிரண்டு தடவைகள் சேவையிலீடுபடும். இந்திய விமானங்கள் காபூல், மாஸ்கோ, கௌஹாட்டி ஆகிய இடங்களுக்கு பாகிஸ்தான் பிராந்தியம் வழியாகச் சேவை நடத்தும்.

### யுத்தக்கைதிகள் பரிவர்த்தனை

ராவல்பிண்டி, பெப். 9

இந்திய — பாகிஸ்தான் போர்க்கைதிகள் நேற்று இரண்டாவது தடவையாக பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட்டனர்.

இந்தியா 163 பாகிஸ்தான் துருப்புக்களை ஒப்படைத்தது. பாகிஸ்தான் 175 இந்தியத் துருப்புக்களை ஒப்படைத்தது.

### தவளைக் கால்கள் ஏற்றுமதி

புதுடில்லி, பெப். 9

வருடமொன்றுக்கு இந்தியா இருபத்தைந்துலட்சம் ரூபா பெறுமதியான தவளைக் கால்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### 'ஆயிரம் கால்களா?'

மூனிச் (டாட்), பெப். 9

மேற்கு ஜெர்மன் மூனிச் நகரில் ஓர் திறமையான கால்பந்தாட்ட வீரர் உருவாகிவருகிறார். இவர்பெயர் 'பெக்கி' என்பதாகும் இவர் விளையாடுவதைப் பார்க்கும் போது இவருக்கு இருப்பது இருகால்களா அல்லது ஆயிரம் கால்களா என்று எவருக்கும் வியப்பு தோன்றும்! அந்த அளவுக்கு கால்களினால் பெக்கி பந்தாடுகிறார் இவருக்கு வயது 20 என்றாலும், 26 வயதான சர்வதேச விளையாட்டு வீரருக்கான தகுதிகள் அனைத்தும் இவருக்கு இருக்கின்றன.

### செயற்கை கால்களை இயக்கும் கருவி

அசென் (டாட்), பெப். 9

கை, கால் இழந்து செயற்கை உறுப்புகளை இயக்குவதற்கான புதிய கருவி ஒன்று மேற்கு ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் உதவியினால் அங்கஹீனர்கள் எளிதாக நடக்கலாம். உடலில் ஓடும் மின்சாரசக்தியையும் உடல் அசைவையும் கொண்டு இக்கருவியை இயக்கலாம்.

யூ. பி எஸ்.

# ராதாகிருஷ்ணனுக்கு ஹோசிமின் கடிதம்

வடக்கு வியட்னாம் ஜனாதிபதி திரு. ஹோசிமின் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு விடுத்துள்ள சமாதானக் கோரிக்கை பற்றி இப்பொழுது விபரம் வெளியாகியுள்ளது.

வியட்னாம் தகராற்றைத் தீர்த்துவைப்பதில் தமது செல்வாக்கை உபயோகிக்குமாறு திரு. ஹோசிமின் டாக்டர் ராதாகிருஷ்ணனைக் கேட்டுள்ளார். இதுசம்பந்தமாக இரண்டு வாரங்களுக்கு முன்பாக திரு. ஹோசிமின் கடிதம் எழுதியிருந்தாராகப் புதுடில்லியிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

#### அமெரிக்கா விபரம் கோருகிறது

டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு வடக்கு வியட்னாம் ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதத்தின் விபரத்தைத் தங்களுக்குத் தந்துதவுமாறு இந்தியாவை அமெரிக்கா கேட்டுள்ளது. விபரம் எதுவும் இன்னும் வெளியிடப்படவில்லை.

# புதிய சீனத்துருப்புகளின் பலவந்த ஊடுருவல்கள்

## சீனாவுக்கு இந்தியா கடும் ஆட்சேபம்

புதுடில்லி, பெப். 9

பலவந்தமான ஊடுருவல்களின் மூலம். கிழக்கு, மேற்கு அரங்குகளிலும் ராணுவ விலக்கு பகுதிகளிலும் சீனா புதிதான பதற்ற நிலைமையைத் தோற்றுவித்திருப்பதாக சீனாமீது இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு சீனா அனுப்பிய குறிப்புக்கு, பதில் குறிப்பொன்று இந்தியா நேற்று அனுப்பியது. இக்குறிப்பு புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்தில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. [illegible] துருப்புகள் பலவந்தமாக ஊடுருவல் செய்திருப்பதன் மூலம் இங்குநெருக்கடியான நிலைமை உருவாகியிருக்கிறது. ராணுவ விலக்கு பகுதிகளுக்கும் கிழக்கு, மேற்கு அரங்குகளுக்கும் புதிய சீனத் துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதன் மூலம் கொழும்பு நாடுகளுக்கும் முழுஉலகுக்கும் அளித்த வாக்குறுதிகளை சீனா அப்பட்டமாக மீறியிருக்கிறது. என்றும் இந்தியகுறிப்பு கூறுகிறது.

"1961-ம் ஆண்டில் இந்திய-சீன சண்டையின்போது தாங்களாகவே செய்து கொண்ட கட்டுப்பாட்டுக் கோட்டை சீனத்துருப்புகள் இப்பொழுது மீறியிருக்கின்றனர். இந்தக் கட்டுப்பாட்டுக்கோடு, உண்மையான எல்லைக்கோடல்ல. புதியநடவடிக்கைகளின் மூலம் சீனத்துருப்புகள் இந்தக் கோட்டையும் கடந்துவந்து இந்திய பிரதேசத்துக்குள் நுழைந்திருக்கின்றனர்' என்றும் இந்திய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவல்பிண்டி, பெப், 9

இந்திய-பாகிஸ்தான் ராணுவத்தலைவர்கள் இன்றுராவல்பிண்டியில் சந்தித்து எல்லை நிலைமை குறித்து ஆலோசனை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு லட்சம் ரூபா வசூலிக்கமுடியாத கடன்

## திருமலை மாவட்டக் கூட்டுறவு வங்கிக்கு பெருநஷ்டம்

திருகோணமலை, புதன்

திருகோணமலை மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு 1962ம் ஆண்டிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்த கடனில் 4 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை வசூலிக்கமுடியாத கடனுகக் கழித்துவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம். இதற்குக் காரணம் கடன் பெற்ற சங்கங்கள் சில செயல்படாதிருப்பதும், சில கலைக்கப் பட்டதுமேயாகும்.

கூட்டுறவு இலாகா உயர்தர அதிகாரியின் சிபார்சின் பேரில்தான் கூட்டுறவு வங்கி சங்கங்களுக்கு மேலதிக கடன் கொடுத்ததாகவும் கூட்டுறவு வங்கி செயல்படுவது சொந்த முதலின்றி மக்கள் வங்கியிடமிருந்து வாங்கும் கடனில் தானென்றும் கூட்டுறவு வங்கி இயக்குநர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மேலதிகக் கடன்தொகை பெற்ற சங்கங்களின் விபரம் வருமாறு:

கந்தளாய் ப. நோ. கூ. ச. சமாஜம்: ஒரு லட்சத்து இருபதினுயிரம் ரூபாய். பேராறு ப. நோ. கூ. சங்கம்: இருபத்திரண்டாயிரம் ரூபாய். அபயபுர ப. நோ. கூ. சங்கம்: இருபத்திமூவாயிரம் ரூபாய். திருமலை நகர வங்கி: முப்பத்தையாயிரம் ரூபாய். கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம்; ஐயாயிரம் ரூபாய்.

## இளந்தமிழர் கழக நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு புங்குடுதீவு இளந்தமிழர் கழகம் ஆண்டுப் பொதுக்கூட்டம் திரு நா. சி. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

காப்பாளர்கள்: க. மயில்வாகனம், அ. ந. தம்பிராசா, அ. க. கண்ணையா. தலைவர்: நா. செல்லக்கண்டு. துணைத்தலைவர்: வி. சண்முகலிங்கம், செயலாளர்: செ. இராசையா, துணைச்செயலாளர்: சி. ம. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: நா. சி சோமசுந்தரம், துணைப்பொருளாளர்; வ. முத்துராசா. 10 பேர் கொண்டசெயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அரசாங்கத்துக்கு விசுவாசமாயிருங்கள்

கேகாலை, புதன்

"தங்கள் தனிப்பட்ட அரசியல் கொள்கைகள் எதுவாக இருந்தபோதிலும் அரசாங்க ஊழியர்கள் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து நாட்டு முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும்" என்று காணி நீர்ப்பாசன மந்திரி றம்புக்கணையில் மின்சாரத்திட்டம் ஒன்றை தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## வியட்காங்கியதளம் பிடிபட்டது

சைகோன், பெப். 9

சைகோனுக்கு 300 மைல் தூரத்தில் வியட்காங்கியரின் தளமொன்றை அமெரிக்க துருப்புகள் நேற்று கைப்பற்றினர் ஆனல் வியட்காங்கியர் எவரும்பிடிபடவில்லை.

## சிவயோக சமாஜ கட்டிடம்

திருமலை, புதன்

திருக்கோணமலை சிவயோக சமாஜம்தற்பொழுது இருந்து இயங்கிவரும்காணியையும் கட்டிடங்களையும் வாங்க 45,000 ரூபாய்வரையில் தேவைப்படுவதால் இம்முயற்சிக்கு இலங்கை வாழ் சைவ அன்பர்களின் உதவியை நாடுவதென்றும் நிதிஉதவி அளிக்க விரும்பும் அன்பர்கள் சமாஜக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோருவதென்றும் அண்மையில் திருகோணமலை "சிவயோக சமாஜத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## சமாதானநீதிபதியாக நியமனம்

பருத்தித்துறை, புதன்

உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்ததென்புலோலியூர் வாசியும் மந்திகை உபதபால்நிலைய அதிபருமான திரு. க. கணபதிப்பிள்ளை பருத்தித்துறை நீதிபரிபாலனப்பகுதிக்கு சமாதான நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

புலோலி அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்றமேற் பார்வையாளராகவும் மற்றும் பலபொது ஸ்தாபனங்களில் தொண்டு புரியும்இவர், வடமராட்சிப் பகுதியில் பிரபல சமூக சேவையாளர் ஆவர்.



## உத்தியோகப் பற்றற்ற நீதிபதியாக மேயர் நியமனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாநகரசபை மேயரும் வழக்கறிஞருமான திரு. எஸ். நாகராஜா, உதவி மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிபதியாகவும் உத்தியோக பற்றற்ற நீதிபதியாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

## அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஒருவர் கமிஷன், தனது அறிக்கையைக் கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தது. 35 பக்கங்களுடைய இக்கமிஷன் அறிக்கையை மந்திரிசபை தனது அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யும்.

கமிஷனரான திரு. என். ஏ. டி' எஸ். விஜயசேகரா வைக் கல்வி மந்திரி கல்வி அமைச்சின்காரியாலயத்தில் சந்தித்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

### வட்டார வேலைகளுக்கு கல்லு, மக்கி, மணல் உபயோகித்தல்

1966-ம் ஆண்டு (மாசி) பெப்ரவரி மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி வரையும், மேற்படி வேலைக்கு கொந்திராத்துக் காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 25-2-66-ந் திகதி மாலை 3-00 மணி வரையும் ரூபா 25/- ரெண்டர்ப் பணமாகவும், ரூபா 2/- ரெண்டர்ப் பத்திரப்பணமாகவும் கட்டுவதன்பேரில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் ஊர் மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. சின்னத்தம்பி,
தலைவர்,
வட்டுக்கோட்டை
ஊர் மன்றம்.

ஊர்மன்ற அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
6-2-1966 1598

## கேள்வி விளம்பரம்

### மின்சாரத் திணைக்களஞ்சியக் கட்டிடம் அமைத்தல்

1966-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 26-2-66-ந் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி வரையும் வட்டுக்கோட்டை ஊர் மன்ற அக்கிராசனரால், பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து "மின்சாரத் திணைக்களஞ்சியக் கட்டிட வேலைக்கு" (சீல்) மெழுகு வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 25-2-66-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும், ரெண்டர்ப் பணமாக ரூபா 25/-ம், ரெண்டர்ப் பத்திரப் பணமாக ரூபா 2/-ம் கட்டுவதன் பேரிலேயே வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் வட்டுக்கோட்டை ஊர் மன்ற அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. சின்னத்தம்பி,
தலைவர்,
வட்டுக்கோட்டை
ஊர் மன்றம்.

ஊர்மன்ற அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
6-2-1966 1599


ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
ஆலய மணி
தினசரி 4-15க்கு மட்டும்
குறுக்ஸ் அனோனிமஸ்
(ஆங்கிலம்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
பானுமதி - ராஜன்
நடித்த
அன்னை

REGAL—JAFFNA
NOW SHOWING
Kirk Douglas
in
For Love or Money
(EastmanColor)

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நுரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்திரா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
ஜெமினி, சிவாஜி, சாவித்திரி
நடித்த
பதிபக்தி


உதைபந்தாட்டம்

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், செவ். கட்டுடை பிளாக் அன்வைற் விளையாட்டுக் கோஷ்டிக்கும் மானிப்பாய் பரிஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டியினரும்கோல்எதுவும் போடாததினுல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மானிப்பாய் விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டி உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு நல்லவிருந்தாக அமையப்பெற்றது.

## 'ஒண்டிக்கட்டை'களுக்கு அறை

மேற்கு பேர்லின், (டாட்) பெப். 9

"ஒண்டிக்கட்டை" மாணவர்கள் வசதியாகத் தங்கிப் படிக்க, வீடுகளில் அறை கிடைப்பது துர்லபம். ரேடியோ, டெலிவிஷன், பத்திரிகைகள் மூலம் வேண்டுகோள் விடுத்தும் பயனில்லாமல் போகவே, மேற்கு பேர்லின் மாணவர்கள் சங்கம் ஒரு நூதனமான வழியைக்கடைப் பிடித்தது "இடுக்கலான குறுகியபெட்டகம்" போன்ற கூண்டில் படுக்கை போன்றவற்றை அமைத்து அதை நகரின் முக்கிய இடத்தில் வைத்தார்கள், அதற்குள் 3 மணி நேரத்துக்கு ஒருவராக மாணவர் அல்லது ஆசிரியர்கள் "குடியிருந்தார்கள்". மாணவர் படும் அவதியை நேரில் கண்டு இரக்கம் கொண்ட வீடு உரிமையாளர்கள் இப்போது மாணவர்களை அழைத்து வசதியான அறைதருகிறுர்கள்.

## பாப்பரசர் செய்தி பரிசீலனை

லண்டன், பெப். 9

வியட்னும் நெருக்கடி குறித்து பாப்பரசர்போல் விடுத்திருந்த சமாதானச் செய்தி புதுடில்லியில் பரிசீலனைசெய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## கொழும்பு

### வியாழன் 10 - 2 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு, 7-15 [illegible] 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் [illegible] 9-15 [illegible] இசை, 9-30 நிலையஒலிப் பதிவுகள்.

## பாகனைக் கொன்ற யானை

பையாகலை, புதன்

மரக்கொம்பை முறிக்க முயன்ற யானை, தனது பாகன் அதைத் தடுத்தார் என்பதற்காக அவரை தனது முதுகிலிருந்து கீழே விழுத்தி காலால் உதைத்ததினுல் அவர் மரணமானுர். 28 வயதான சைமன் சில்வா என்பவரின் மரணம் குறித்து நடத்தப்பட்ட மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

பையாகலை காலி வீதியில் யானைப்பாகனுன சைமன் யானையில் சென்றுகொண்டிருக்கையில் யானை வீதியின் அருகில் உள்ள காணியில் இருந்த மரத்திலிருந்து கொம்பொன்றை முறிக்க முயன்றது. யானைப்பாகன் அதைத் தடுத்ததும், தனது உடலைக் குலுக்கி அவரைக் கீழே விழுத்தி மிதித்தது ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானுர். பின்னர் இந்தயானை பையாகலை மகாவித்தியாலயத்துக்குள் சென்று மாணவர்களை கலைத்தபோது யானைப் பாகனின்உதவியாளர் வந்து யானையை அடக்கி சங்கிலியில் பிணைத்தார்.

## புலிகளின் அட்டகாசம்

மாங்குளம், புதன்

மாங்குளத்திலிருந்து இருபது மைலுக்கு அப்பால் இருக்கும் திருட்டிகுளத்தில் புலிகளின் தொல்லையும் அட்டகாசமும் அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களாக புலிகள் அக்கிராமத்தில் வாழும் மக்களின் பசுக்களை கொன்று வருகின்றன. இதனுல் இங்குள்ள குடியேற்றத்திட்டத்தில் வாழும் மக்கள் கிலியடைந்து காணப்படுகின்றனர். சிலர் புலிகளை கொல்லுவதற்காக இறந்த மாடுகளில் 'பொலிடோல்' 'என்றெக்ஸ்' போன்ற நஞ்சுத்திரவங்களைப்பூசியும் புலிகள் அகப்படவில்லை.

## காங்கிரஸ் காரியக்கமிட்டி

ஜெய்ப்பூர், பெப். 9

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் காரிக்கமிட்டி இன்று இங்கு கூடியது.

## வெங்கட்ராமன்

சென்னை, பெப். 9

தமிழ்நாட்டு தொழில்மந்திரி, திரு. வெங்கட்ராமன் இன்று ஜப்பானுக்குப் பயணமானுர்.

ஜப்பானில் பல தொழில் நிறுவனங்களுக்கும் இவர் சென்று பார்வையிடுவார்.

## 22 மண்டலங்களை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் ஆரம்பித்து அரசியலை ஒரு பொழுதுபோக்காகக் கொள்ளமுடியவில்லை.

### பிரஜைகளின் சுதந்திரம்

சமஷ்டி அரசியலிலும் காண்டன் அரசியலிலும் ஒவ்வொரு பிரஜைக்கும் பல அடிப்படைச் சுதந்திரங்கள் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளன. இது மறுக்கப்படுமாயின் அவர் சமஷ்டி நீதிமன்றத்துக்கு முறையிடலாம். அவரது மனு அனுமதிக்கப்பட்டால் சமஷ்டிச் சட்டம்கூடக் கைவிடப்படலாம். மொழி, மதம், அரசியல், சமூக சிறுபான்மையினருக்குத் தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மைப் பலத்தால் இவர்களது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படமுடியாது.

(வளரும்)


## வரிவிளம்பரம்

### தேவை

நாவற்குழி பல நோ. கூ. சங்கத்திற்கு 28-2-66 தொடக்கம் கடமையாற்ற ஒரு மனேச்சர் தேவை. தகமை க. பொ. த. அல்லது அதற்குச்சமமான பத்திரம். சம்பளம் ரூபா 90x140 5X10

பிணை:- ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூ. 2000/- கூட்டுறவுப்பயிற்சி பெற்றவரும், வியாபார அனுபவமுள்ளவரும் விரும்பத்தக்கது. சமீபத்தில் பற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் 15-2-66 வரை மேற்படி காரியதரிசி, கைதடிக்கு விண்ணப்பிக்கவும். 1900

அரசாங்க இலாகாக்களிலும் பிரத்தியேக ஸ்தாபனங்களிலும் அவர் அவர் தகுதிக்கு உரிய அநேக வேலைகள் உண்டு. 18—40 வயசு உள்ள 7-ம் வகுப்பு முதல் எஸ். எஸ். ஸி. வரை தராதரமுள்ளவர்கள் ரூபா 2/- போஸ்டல் ஓடர் அனுப்புக. முழுவிபரங்களுக்கும் விண்ணப்பபத்திரத்துக்கும் றஸ்ற் டுப்பிளிகேற்றர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1908

### விற்பனைக்கு

டாக்டர் ஒருவரால் பாவிக்கப்பட்ட 4 சிறி 6000 தொடர்பு எண்ணுள்ள A / 55 கேம்பிரிட்ஜ் உடனடியாக விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ளது. காலை 9 மணி தொடங்கி மாலை 4 மணி வரை யாழ்ப்பாண வாடிவீட்டுக்கு எதிரில் பார்வையிடலாம். 1904

நல்லூருக்குக் கிட்ட அரசடிவீதி 156-ம் இலக்க வீடும் தெல்லிப்பளை ஸ்ரேசனுக்குப் பக்கத்தில் மயிலிட்டி வீதியில் 3 1/2 பரப்பு நிலமும் விற்பனைக்குண்டு. வீட்டுவிலாசத்தில் காண்க. 1905

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்த கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## மகாசிவராத்திரி யாத்திரை

பம்பலப்பிட்டி, புதன்

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு வழக்கம்போல் கொழும்பு இந்து வாலிபர் சங்கம் சார்பில் ஒரு யாத்திரிகர் கோஷ்டி கொழும்பிலிருந்து திருக்கேதீச்சரம் செல்லும் விரிவான அடிப்படையில் இந்த யாத்திரைக்கான ஒழுங்குகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இக்குழுவில் சேர்ந்து செல்பவர்களுக்கு விசேஷ வசதிகளும் சலுகைகளும் உண்டு.

கோஷ்டி எதிர் வரும் 16-ந் திகதி புதன்கிழமை இரவு 8-35 மணிக்கு கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து மன்னர் புகைவண்டியில் புறப்பட்டு மீண்டும் 19-ந் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மன்னர் புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு புறப்படும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்ப்பூர் மகாநாடு:

# சாஸ்திரி-அயூப்கான் பிரகடனம் கௌரவிக்கப்பட்டது

## "உணவுப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுவோம்"

— இந்திரா

ஜெய்ப்பூர், பெப். 5

அகில இந்திய தேசிய காங்கிரஸின் பதினேழாவது மகாநாடு இன்று இங்கு ஆரம்பமானது. காலையில் நடைபெற்ற காரியக்கமிட்டிக் கூட்டத்தில் டாஷ்கண்ட் பிரகடனம் ஆராயப்பட்டு ஏகமனதாக வரவேற்கப்பட்டது. அந்தப் பிரகடனத்தைப் பாராட்டும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஜெய்ப்பூர் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக, இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு வந்து சேர்ந்தபொழுது அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ராஜஸ்தான் கவர்னர், ராஜஸ்தான் முதன்மந்திரி, முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் திருமதி இந்திரா காந்தியை வரவேற்றனர்.

"உணவு முக்கியம்"

மகாநாட்டில் கலந்து கொள்ளுமுன்னர் பிரதமர் இந்திரா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், ஜெய்ப்பூர் மகாநாட்டில் உணவும் பொருளாதார மும் தான் முக்கியமாக ஆராயப்படும் என்று நம்பிக்கையளித்தார்.

"நாட்டின் உணவுப் பிரச்னைதான் முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருக்கிறது. இதனைத் தீர்ப்பதற்கு சகல வழிகளும் மேற்கொள்ளப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் இன்றுகாலை இங்கு வந்து சேர்ந்தார்.

டாஷ்கண்ட் பிரகடனம்

இன்று காலை நடைபெற்ற காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் டாஷ்கண்ட் பிரகடனம் கௌரவிக்கப்பட்டது.

"டாஷ்கண்ட் பிரகடனம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கும் கௌரவமான, நியாயமான வழியை காண்பித்திருக்கிறது. இருநாடுகளின் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் இது அத்திபாரமிட்டுள்ளது. சமாதானமாக இருநாடுகளும் வாழ்வதற்கு இப்பிரகடனம் வழிகோலுகிறது" என்று தீர்மானவாசகம்கூறுகிறது.

சாஸ்திரிக்கு பாராட்டு

டாஷ்கண்ட் பிரகடனத்தைவரவேற்று இயற்றியுள்ள தீர்மானத்தில் காலம் சென்ற இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் சமாதான சேவை மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜினையும் தீர்மானம் பாராட்டியுள்ளது.

இன்று பிற்பகல் நடைபெற்ற மகாநாட்டில் நாட்டின் உணவு பொருளாதார நிலைமைபற்றி ஆராயப்பட்டது.

---

## வட, கீழ் மாகாணங்களில் சிங்கள ஆசிரியரை நியமித்தல்

### பெற்றோர் -- ஆசிரியர் சங்கங்களின் கருத்து அறியப்படமாட்டாது

திருக்கோணமலை, புதன் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமனம் செய்வது பற்றி பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களின் கருத்தையறிந்து அறிவிக்குமாறு வித்தியாதிபதி வித்தியாதிகாரிகளுக்கு அனுப்பிய அறிக்கையை வாபஸ் வாங்கியுள்ளார். தனது அறிக்கை குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாமென்று வித்தியாதிபதி திருமலை கல்வி அதிகாரியை கேட்டுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து திருமலைக் கல்வி அதிகாரி இங்குள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களின் விசேட கூட்டங்களைக் கூட்டுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை கைவிடும்படி வேண்டியுள்ளார்.

இதற்கிடையில் நேற்று மாலை கூடிய திருமலை மெதடிஸ்த மகளிர் ஆங்கில பாடசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் சிங்கள பாடசாலைகளில் தமிழாசிரியர் நியமிக்கப்படும் பட்சத்தில் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமிக்க அனுமதிப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். நிலாவெளி கோபாலபுரம் அரசினர் தமிழ்ப் பாடசாலை பெற்றோர்-ஆசிரிய சங்கக்கூட்டத்தில் சிங்கள ஆசிரியர் நியமிக்க அனுமதிப்பது என்று கூறும் பிரேரணை 25—1 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## மரண அறிவித்தல்

மூளாய் நொதேர்ண் (Northern) கொம்பெனி கம்பனியின் நிர்வாக டைரக்டரும், நித்தியானந்தம், இரத்தினசிங்கம், இராஜசிங்கம், எதிர்வீரசிங்கம், பரமேஸ்வரி ஜெயராஜசிங்கம், காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் தந்தையுமான எஸ். எஸ். நாகலிங்கம் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் பெரியவிளானிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பெரியவிளான் மயானத்துக்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிவிக்கின்றோம். 1907

## கூட்டுறவுக்கடையில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பரமநாதனுக்குக் கிடைத்த தகவலின் பேரில் முரசுமோட்டை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை திடீரென பரிசோதித்தபொழுது 2 கூப்பன் அரிசி குறைந்திருந்ததாகவும் பப்பாய்வெங்காயம்கட்டுப்பாட்டுவிலைக்கு அதிகமாக விற்றதாகவும் கண்டுபிடிக்கப்பட்டு அந்த பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(நி ந.)

## புதிய உதவி மந்திரி?

கொழும்பு, புதன்

தெகிவளை கல்கிசைத் தொகுதிப் பிரதிநிதி திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா உள்நாட்டு அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியாக நியமிக்கப்படக்கூடுமென அறியப்படுகிறது. திருமதி குசுமா ராஜரத்தினாவின் ராஜினாமாவால் இப்பதவி காலியாக இருக்கிறது.

## ஐயாறன்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

மென்றும் மேயர் சமாதானம் கூறினார். ஆனால் இதைப்பற்றி இங்குவந்த அமெரிக்க விருந்தினர் என்ன நினைத்தார்களோ! இவ்விதம் ஏற்படாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக்கொள்ள முடியாதா?

இப்படித் திடீரென மின்சக்தி நின்றுவிட்டால் நம் ஆஸ்பத்திரியிலும் கூட மாற்று ஏற்பாடுஇல்லையாம். பொலிஸ் ஸ்டேஷனில் மட்டும் தனி 'டைனமோ' கருவி வைத்திருக்கிறார்களாம். ஆஸ்பத்திரியைவிட பொலிஸ்டேஷன் தான் அதிக முக்கியம் போலும்! இது எப்படியாயினும் இந்தக் குறையைக் குறைக்கஅதிகாரிகள் ஆவன செய்ய வேண்டியது, வளர்ந்து வரும் வடபகுதித் தலைநகருக்கு மிகவும் அவசியமாகுமென்பதை அன்று அதிகம் உணர முடிந்தது.

ஃ ஃ ஃ

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் மனைவியாரான லலிதா அம்மையார் இப்போது 'டீ' குடிப்பதையும் நிறுத்திவிட்டாராம்! காலையில் அவரது கணவர் எழுந்து இரண்டு கப் 'டீ' போட்டு தம் மனைவிக்கு ஒன்றும் தாம் ஒன்றுமாகச் சாப்பிடுவது வழக்கமாம். எவ்வளவு அன்பு! இப்போது "டீயைப்பார்த்ததுமே பழைய நினைப்புகளெல்லாம் வருகின்றன. இனி யார்கையால் அதைச் சாப்பிடுவேன்!" என்று சொல்லி, அந்தப்பானத்தையே விட்டுவிட்டாராம் அந்த உத்தமி. இந்துப் பெண்களின் பதிபக்திதான் என்னே!

ஃ ஃ ஃ

முத்திசையும் புனற் பொன்னி மொய்பவளங் கொழித்துந்தப், பத்தர் பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த, எத்திசையும் வானவர்கள் எம் பெருமானென இறைஞ்சும், அத்திசையாம் ஐயாறர்க்காளாய் நான் உய்ந்தேனே.

— அப்பர்சுவாமிகள்

## கடனுதவி

லண்டன், பெப். 9

இந்தியாவின் உணவு நெருக்கடியைத்தொடர்ந்து இந்தியாவுக்கு பிரிட்டன் [illegible] கடனுதவி அளித்துள்ளது.

## மந்திரி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இவரைஇவரதுவீட்டிலோ அல்லது துறைமுகத்திலோ அல்லது கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலோ வைத்து தீர்த்துவிடுவதென திட்டமிடப்பட்டிருந்ததாம்.

பொலிசாருக்கு கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி பிரபல தொழிற்சங்கவாதிஒருவரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இன்று காலையில் திரு. சுகததாசா டெலிபோன் மூலம் தம்மைக் கொல்ல எடுக்கப்பட்ட திட்டங்கள்பற்றி பிரதமருக்குத் தெரிவித்தார்.

ராஜாங்கமந்திரி திரு.ஜே ஆருக்கும் இதுபற்றி தெரிவித்தார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்திலிருந்து திரு. சுகததாசா வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றபோது அவருடைய கார் அங்கு இருக்காததை அவர் கவனித்தார். இதுஅவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது மெய்க்காப்பாளர் தாயார் (சுகததாசாவினுடைய) அவசரமாககாரை அனுப்பக் கேட்டுக்கொண்டதால் அப்படியே தாம் அனுப்பி விட்டதாகவும் மெய்க்காப்பாளர் தெரிவித்தார்.

பின்னர் மெய்க்காப்பாளர் வீடுசென்றடைந்ததும் தான் எதற்காகஅவருடைய கார் வீட்டுக்கு அழைக்கப்பட்டது தெரியவந்தது. வழமையாக காரில் பிரயாணம் செய்வதை தடுப்பதற்காக மெய்க்காப்பாளர் இந்த ஏற்பாட்டை செய்திருந்தார். தனது மந்திரியை கொல்லச்செய்யப்பட்டதிட்டமென்று தெரியவந்ததை தொடர்ந்துதான் மேற்படி பாதுகாப்பை செய்ததாக மெய்க்காப்பாளர் தெரிவித்தார்.

மேற்கொண்டும் தகவல் கிடைக்கும்வரையில் தாம் இரகசியமாக வைத்திருந்ததாகவும் எல்லா விதத்தாலும் தகவல்கள் எடுத்தபின்னரே இதுபற்றித் தெரிவித்ததாகவும் இதைத்தொடர்ந்தே சுகததாசா பிரதமருக்கு இதைத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## அரிசியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டறிக்கையொன்று வெளியிடப்படும்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் கண்டி, நுவரேலியா, அனுராதபுரம், கல்லோயா ஆகிய இடங்களிக்கு ஜெனரல் நீவின் விஜயம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஜெனரல் நீவின் கோஷ்டியினர் இம்மாதம் பதினாறும் திகதி இலங்கையைவிட்டுப் புறப்படுவார்கள்.

## எதிர்க்கட்சி...

(1-ம் பக்கத் தொடச்சி)

பதில் இன்று அமைதியான சூழ்நிலையில் விவாதம் நடைபெற்றது. பொலிசாரினால் அன்றையதினம் வெளியேற்றப்பட்ட திருவாளர்கள் சோமவீர சந்திரசிறியும், பிறின்ஸ் குணசேகராவும் சபைக்கு வந்திருந்தனர்.

பிரேரணையைக் கொண்டு வந்த எதிர்க்கட்சியினர் இம்முறைதான் ஆகக்குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளனர் எதிர்க்கட்சி ஆசனங்கள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன.

## அ. பொ. சே. தெ சங்கக் கூட்டம்

### இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கத்தின் தற்போதைய நிலைமை பற்றி ஆராயும் பொருட்டு குறிப்பிட்ட சங்கத்தின் யாழ்ப்பாண கிளையின் விசேஷ கூட்டமொன்று இன்று மாலை யாழ்ப்பாணம் அரசாங்கச்செயலக தேநீர் விடுதிச்சாலையில் நடைபெறும்

இக்கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் உபதலைவர் திரு. பீட்டர் முத்தையா உட்படத் திருக்கோணமலை மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள கிளைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள்

## விண்ணப்பப்பத்திர விநியோகம்

யாழ்ப்பாணம், வியாழன்

வேலையற்ற வாலிபர்களுக்கு விஸ்வமடுக் குளத் திட்டத்தில் காணி கோரும் விண்ணப்பப்பத்திரங்கள் இம்மாதம் 14-ந் திகதி வரை கரைச்சிக் கிராமச் சபைக் காரியாலயத்தில் விநியோகிக்கப்படும் என சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

இணுவை இளைப்பாறிய உபாத்தியாயர் திரு. செல்லப்பா அம்பலவாணர் காலமாகிவிட்டார். இவர்செல்லம்மாவின் அருமைக்கணவரும், அரசினர் பண்ணை அதிபர் ஸ்ரீரங்கநாதன், ஜெயபாலரத்தினம் ஆகியோரின் தகப்பனாரும், கௌரி தேவியின் மாமனாரும், சசிலேகாவின் பேரனாரும் ஆவர். அன்னாரது பூதவுடல் இறுதிகிரியைகளுக்காக இணுவை ஸ்ரீநிவாசம் இல்லத்திலிருந்து தாவடி மயானத்துக்கு இன்று மாலை 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். தகவல்; சி. சுப்பிரமணியம். 1909

---

மரண அறிவித்தல்

## தவநாதன்

காலஞ்சென்ற திரு. S. சுவாமிநாதன் (இளைப்பாறிய பல்கலைக்கழக கணக்காளர்) திருமதி மகேஸ்வரிதேவி சுவாமிநாதன் அவர்களது சிரேஷ்ட புதல்வனும், திரு. K. C. தங்கராஜா, டாக்டர் K. C. சண்முகரெத்தினம் ஆகியோரின் மருகரும், ரவீந்திரநாதன், மகேந்திரன், சரோஜா ஆகியோரின் அருமைச் சகோதரருமாகிய தவநாதன் நேற்று பிற்பகல் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் வண்ணை சிவன்கோவில் மேற்கு வீதி 57-ம் நம்பர் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org